# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2188/4 - 2020 අගෝස්තු මස 10 වැනි සඳුදා - 2020.08.10

*2188/4 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 10 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இலக்கம்: KDS/KGK/4/9/2018/01/LA.
காணி அமைச்சின் இல.: 4 - 3/11/2018/UD/147.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி கடவத் சத்தர மற்றும் கங்கவட்டக் கோறளை பிரதேச செயலாளர் பிரிவில், கங்கவட்டக் கோறளை சிறு பிரிவில், கண்டி மாநகர சபை எல்லைக்குட்பட்ட வட்டார இல. 18 - கட்டுக்கெலே வட்டாரத்தில், இல. 255 - கட்டுக்கெலே கிராம அலுவலர் பிரிவில், கட்டுக்கெலே கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2020.04.30 ஆந் திகதிய ஆரம்ப வரைபட இல. මහ: 6996 இல் துண்டு இல. 1 எனக் காட்டப்பட்ட 0.0051 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித் துண்டு.

*01. **துண்டு இல. 1***

காணியின் பெயர்: சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தையில் வரி மதிப்பீட்டு இல. 185 ஐ உடைய காணி; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: தெரியாது; விஸ்தீரணம்: 0.0051 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக் காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கண்டி கடவத் சத்தர மற்றும் கங்கவட்டக் கோறளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். காணிக்குள்ள உரிமையை உறுதிப்படுத்துவதற்காக காணியின் உறுதியையும் மற்றும் பிற ஆவணங்களையும் நட்டஈட்டு விசாரணையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

யூ. ஜே. எம். எஸ். எஸ். பீ. ஜயசிங்க,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத் சத்தர மற்றும் கங்கவட்டக் கோறளை

பிரதேச செயலகம்,
கண்டி கடவத் சத்தர மற்றும் கங்கவட்டக் கோறளை,
*2020, யூலை 31.*

*8 - 518*